# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 16.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள். SA 2090/SCIC/2023 & CP 999/SCIC/2023**

திரு.L.ராஜேஷ் த/பெ.C.லோகநாதன்
1/41 மொண்டி அம்மன் கோயில் தெரு — மேல்முறையீட்டாளர்
பாடியநல்லூர்,
ரெட்ஹில்ஸ், சென்னை-600 052.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
ரெட்ஹில்ஸ்,சென்னை-600 052.

**ஆணை**

**SA 2090/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 21.11.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.12.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.12.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.02.2023 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 11.04.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 26.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார் பதிவாளர் அலுவலகம், ரெட்ஹில்ஸ் சார்பதிவகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “Sub: Information about Document No.9931, dated 08/10/2025 registered in Redhills Sub Registrar Office, Tiruvallur District - regarding - Request to issue the certified copy of the entire parent documents which are submitted during the registration of settlement deed document No.9931 dated 08/10/2025, which is registered in Redhills S.R.O.” என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**CP 999/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 21.11.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.12.2022 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 18.03.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.11.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 26.12.2024 |

2. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார் பதிவாளர் அலுவலகம், ரெட்ஹில்ஸ் சார்பதிவகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “Sub: Information about Document No.9932, dated 08/10/2025 registered in Redhills Sub Registrar Office, Tiruvallur District - regarding - Request to issue the certified copy of the entire parent documents which are submitted during the registration of settlement deed document No.9932 dated 08/10/2025, which is registered in Redhills S.R.O.” என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**3. மேற்குறிப்பிட்ட SA 2090/SCIC/2023 & CP 999/SCIC/2023 ஆகிய இரண்டும் ஒரே பொருண்மை கொண்டுள்ளதாக அமைந்துள்ளதால், அவையிரண்டையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய (16/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.உ.ஏ.குப்பன், இளநிலை உதவியாளர், ரெட்ஹில்ஸ் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 22/12/2022 தேதியிட்டும் மீண்டும் 15/11/2024 தேதியிட்டு இனவாரியாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரரும், அதனைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் தெரிவித்ததோடு, தான் வேறு வகைகளில் நகல்களையும், தகவல்களையும் பெற்றுக் கொண்டதாகவும், தற்போதைக்கு தனக்கு தகவல்கள் எதுவும் தேவையில்லை எனத் தெரிவித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**4. மனுதாரரின் புகார் மனுவைப் பொறுத்த வரை, மனுதாரர் தெரிவிக்கையில், தனக்கு 22/12/2022 தேதியிட்டு மேலெழுந்தவாரியான தகவல் அதாவது கட்டணம் செலுத்த வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்ததேயொழிய, எவ்வளவு, எந்த வகையில் செலுத்த வேண்டுமென்ற தகவல் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மனுதாரரின் கூற்றினை ஆணையம் ஏற்கிறது.**

**5. எனவே, அப்போதைய (22/12/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் திரு. பழனி (தற்போது) மேலாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், வட சென்னை அவர்கள் மனுதாரருக்கு மேலெழுந்தவாரியான தகவல் அளித்தமைக்கு பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன காரண விளக்கத்தைப் பெற்று ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார். விசாரணையின் போது, மனுதாரர் தனக்கு எவ்வித தகவலும் தேவையில்லை எனத் தெரிவித்தார்.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 2090/SCIC/2023 & CP 999/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
ரெட்ஹில்ஸ்,சென்னை-600 052.

2. திரு.பழனி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
(தற்போது) மேலாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
வடசென்னை, (இ) குறளகம், சென்னை

**மேல்முறையீட்டாளர்**

திரு.L.ராஜேஷ் த/பெ.C.லோகநாதன்
1/41 மொண்டி அம்மன் கோயில் தெரு
பாடியநல்லூர்,
ரெட்ஹில்ஸ், சென்னை-600 052.

நகல்.
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28.
2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)
RG/PC